திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அரசுப் பள்ளிகளில் அதாவது 'பி' விங் பள்ளிகளில் பணிபுரியும் இந்தப் பிரிவு ஊழியர்கள் விஷயத்திலும் இதே நிலைமைதான் இருக்கின்றது. பொதுவாக அவர்கள் நியமனம் செய்யப்பட்ட காலத்திலிருந்து அவர்கள் ஓய்வுக் காலம் வரையில் அவர்கள் இந்தப் பெயரில்தான். தற்காலிக ஊழியர்கள் என்ற பெயரில்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுப்பு போன்ற எந்தச் சலுகைகளும் கிடையாது. இந்த அரசு எவ்வளவோ பிரிவினருக்கு பல சலுகைகளைச் செய்து கொடுத்திருக்கின்றது. அந்த முறையில் இப்படித் தற்காலிகமாகவே உள்ள இந்த 'கண்டின்ஜென்ஸி மீனியல்ஸ்'க்கும் விடுப்பு போன்ற வசதிகளைச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லை. அது பற்றி ஆராய வேண்டும்.

Integration of the Cadre of 1st, 2nd Class Magistrates with the Cadre of District Munsiffs.

* 175 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Second State Conference of the Tamil Nadu State Magisterial Service Association has requested the Government to implement the scheme of integrating the cadre of 1st and 2nd Class Magistrates with the cadre of District Munsiffs and to suspend till then, the recruitment of District Munsiffs by the Tamil Nadu Public Service Commission; and

(b) if so, the action taken thereon?

முதல், இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிபதி பதவிகளை மாவட்ட முன்சீப் பதவிகளுடன் இணைக்கும் திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதல், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவிகளை மாவட்ட முன்சீப் பதவிகளுடன் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறும், அவ்வாறு செயல்படுத்துகிற வரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் மாவட்ட முன்சீப்புகளைத் தேர்ந்தெடுப்பதை நிறுத்தி வைக்குமாறும் தமிழ்நாடு மாநில மாஜிஸ்ட்ரேட்டுகள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாடு கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) உயர்நீதி மன்றத்துடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.
(பிற்பகல் 4-10)

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பதவிகள் அனைத்தும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பதவிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிகளையும், டிஸ்ட்டிரிக்ட் முனிசிப் பதவிகளையும் ஒன்றாக ஆக்குவது என்பதுதான் 'இன்டெக்ரேஷன்' ஆகும். இந்த இணைப்பு பற்றி உயர்நீதி மன்ற அலுவலர்களைக் கலந்து ஆலோசித்ததில், அவர்களும் கொள்கையளவிலே ஒத்துக்கொண்டார்கள். நடைமுறைப் படுத்துவதில் என்னென்ன சிக்கல்கள் ஏற்படும் என்பது பற்றி கடிதப் போக்குவரத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

Thiru A. R. DAMODARAN : Sir, it is reported that there are over 100 Second Class Magistrates who have been appointed on a temporary basis. May I know whether, until a decision is taken, none of these persons will be ousted from service?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இடைக்காலத்தில் நியமிக்கப்பட்ட அவர்கள் எல்லாம் ரெகுலரைஸ் பண்ணப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலே அரசாங்கம் அதைப் பரிசீலித்து எந்த அளவுக்கு வேகமாக ரெகுலரைஸ் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ரெகுலரைஸ் செய்து வருகிறோம். இதற்கு இடையிலே இன்டெகரேஷன் ஆகுமா என்பது சந்தேகம்தான். கடிதப் போக்குவரத்தில் இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. இந்தக் காரணத்திற்காக அவர்கள் பாதிக்கப் படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வோம்.

* 176. *Q.*—Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to abolish the present Tamil Nadu Magisterial Service and merge the same with the Tamil Nadu State Judicial Service ; and

(*b*) if so, the details thereof?

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தற்போதுள்ள தமிழ்நாடு மாஜிஸ்டிரேட்டுகள் பணியாளரமைப்பை நீக்கி அதை தமிழ்நாடு அரசு நீதித்துறை பணியாளரமைப்புடன் இணைத்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?